# சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
## வாரப் பாடசாலை

செயலட்டை - 20

வாரம் -01

2021.09.27- 2021.10.01

பாடம் :- பொருளியல்

தரம் - 13

தயாரிப்பு:- திருமதி .F. றிஸ்லா BA (Hons)
இ/ ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்

தேர்ச்சி மட்டம் :- 2.9

**பின்வரும் எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

01) கீழ்நோக்கிச் சாயும் நிரம்பல் வளையியொன்றினது சரிவு 12 ஆகும். 15 ரூபா விலையில் குறித்த பண்டத்தினது நிரம்பல் தொகை 60 அலகுகள் ஆகும். 15 ரூபா விலையில் விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சிக் குணத்தினை கணிப்பிடுக.

02) QS = -30 + 4P எனும் நிரம்பல் சமன்பாட்டில் 20 ரூபா விலையில் விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சிக் குணத்தினை கணிப்பிடுக.

03) நிரம்பல் கோட்டின் சரிவு, நிரம்பல் நெகிழ்ச்சி ஆகியவற்றை வேறுபடுத்துக.

04) கோதுமையின் சந்தை விலை ஒரு கிலோ 70 ரூபாவாக காணப்பட்ட போது அதன் வாராந்த நிரம்பல் தொகை 1400 கிலோவாகக் காணப்பட்டது. கோதுமையின் விலை மட்டம் 105 ரூபாவாக அதிகரித்த போது அதன் நிரம்பல் தொகை 25% இனால் மாத்திரம் அதிகரித்தது எனில், வேண்டப்படுவது,

அ ) நிரம்பல் அட்டவணை

ஆ ) 70 ரூபா விலையில் நிலவுகின்ற நிரம்பல் நிகழ்ச்சியினை புள்ளி முறையில் கணிப்பிடுக.

இ ) 70 ரூபா, 105 ரூபா ஆகிய விலைகளுக்கு இடைப்பட்ட பிரதேசத்தில் நிலவுகின்ற நிரம்பல் நெகிழ்ச்சியினை வில் முறையில் கணிப்பீடுக.

05) மையப்புள்ளியினூடாகச் செல்லுகின்ற எந்தவொரு நேர்க்கோட்டு நிரம்பல் வளையியும் ஒன்றுக்குச் சமமான நிரம்பல் நெகிழ்ச்சியுடையது என்பதை நிறுவுக.

06) விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கின்ற காரணிகள் யாவை?